www.tamilarangam.net

# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

## கட்சியின் இரண்டாவது காங்கிரஸை நோக்கி முன்னேறுவோம்

தோழர் அவர்கட்கு,

புரட்சிகர வணக்கங்கள்.

1. கட்சியின் காங்கிரஸை முறைப்படி உடனடியாகக் கூட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்குரிய வாய்ப்புக்களோ சூழ்நிலைகளோ அண்மைக் கால கட்டத்தில் கிடையாது என்பதனால் இரண்டாவது காங்கிரஸைக் கூட்டுவதற்கு முன்னோடியாக, இன்றைய சூழ்நிலைகளைத் தேவைகளையும் கருத்திற் கொண்டு அதற்குத் தக்கபடியான ஸ்தாபனத்தின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, தற்போது நடைமுறையிலுள்ள மத்திய கமிட்டியினால் பரந்துபட்ட ரீதியிலான நிலைமைகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் தேர்ந்தெடுக்கப்படும் தோழர்களைக் கொண்ட ஒரு தேசிய மாநாட்டைக் கூட்டுவதென மத்திய கமிட்டி முடிவு செய்துள்ளது. மாநாட்டுக்கான இடம், காலம் என்பன தோழர்களுக்கு பின்னர் அறிவிக்கப்படும்.

2. 1984ம் ஆண்டு ஜூன் 28 – ஜூலை 6 வரை நடைபெற்ற கட்சியின் முதலாவது காங்கிரஸுக்குப் பின்னர் கட்சியின் இரண்டாவது காங்கிரஸை முறைப்படி கூட்டுவதற்கான சூழ்நிலைகளோ, வாய்ப்புகளோ ஏற்படவில்லை என்பது தோழர்கள் நன்கறிந்த விடயம். ஆகையினால், முதலாவது காங்கிரஸினால் தெரிவு செய்யப்பட்ட மத்திய கமிட்டியே–நிலைமைகளின் விளைவாய் ஏற்பட்ட மாற்றங்களுடன்–தொடர்ந்தும் ஸ்தாபனத்திற்கு தலைமை தாங்க வேண்டியிருந்து வந்திருக்கின்றது. இதே வேளை இந்தக் கால கட்டத்தில் பல முக்கியமான அரசியல் மாற்றங்களும் ஸ்தாபன ரீதியான மாற்றங்களும் நடைபெற்றுள்ளன. இந்த நிலைமைகளின் பின்னணியில் புதிய கால கட்டத்தில் நடை போடுவதற்கு ஸ்தாபனத்தின் காங்கிரஸை கூட்டுவது அவசியமானது என மத்திய கமிட்டி கருதுகின்ற போதிலும் முறைப்படி காங்கிரஸை கூட்டுவதற்கான நிலமைகள் புறச் சூழ்நிலைகள் ரீதியிலும் ஸ்தாபன ரீதியிலும் இப்போது இல்லை என மத்திய கமிட்டி முடிவு செய்தது. அதே வேளை தோழர்கள் மத்தியில் நிலவும் பல்வேறுபட்ட நிலமைகளை நீங்கள் ஒவ்வொருவரும் அடையாளம் கண்டிருப்பீர்கள். எனவே இந்நிலையில் தொடர்ந்தும் ஸ்தாபனம் இப்போதுள்ளபடியே செயற்பட்டுக் கொண்டு இருப்பது ஆரோக்கியமானது அல்ல என மத்திய கமிட்டி கருதுவதனால் உடனடி சாத்தியமான ஒரு தேசிய மகாநாட்டை கூட்டுவதென மத்திய கமிட்டி முடிவு செய்துள்ளது. கூட்டப்படும் மகாநாட்டின் முடிவுகள் அதற்கு அடுத்து வரும் கட்சியின் இரண்டாவது காங்கிரஸினால் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு உறுதி செய்யப்படும். எனினும் அதுவரைக்குமான கால கட்டத்திற்கு எதிர்வரும் மகாநாட்டின் முடிவுகளே ஸ்தாபனத்தின் அடிப்படைகளாகவும் வரையறைகளாகவும் வழிகாட்டுதல்களாகவும் அமையும் என மத்திய கமிட்டி முடிவு செய்துள்ளது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3. இச் சுற்றறிக்கை யார் யாருக்கென பெயர் குறிப்பிடப்பட்டு அனுப்பப் படுகின்றதோ அவர்களே மாநாட்டின் பிரதிநிதிகளாவர். தோழர்கள் யாராவது மாநாட்டில் பிரதிநிதிகள் தொடர்பாக பிரேரிக்க விரும்பின் அதனை தமது தொடர்பில் உள்ள மத்திய கமிட்டி உறுப்பினருக்கு நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமோ உடனடியாக எழுத்து மூலம் தெரிவிக்கவும்.

4. <u>மாநாட்டில் ஆராயப்படவுள்ள விடயங்கள்</u>
<u>அ. புரட்சிப் பாதையில் எதிர்காலம் தொடர்பாக</u>:-

1. இலங்கையின் சமூக அரசியல் பொருளாதார நிலை,
2. கடந்தகால ஈழ தேச விடுதலைப் போராட்டம் பற்றியும், புதிய யதார்த்தங்களின் தோற்றங்கள் பற்றியும், ஈழ மக்களின் தேசிய சுய நிர்ணய உரிமைக்கான எதிர் கால போராட்டம் பற்றியும்,
3. சர்வதேச அரசியல்-சிறப்பாக தென்னாசிய உறவுகள் உட்பட்ட-நிலை
4. இலங்கையில் புரட்சிகரப் பாதையின் எதிர்காலம்
5. அரசியற் திட்டம்

அ. போராட்டப் பாதையின் இடைக்காலக் கோரிக்கைகள்

ஆ. போராட்டத்தின் நீண்டகால இலக்குகள்

இ. போராட்டத்தின் மூல உபாயங்கள்

<u>ஆ. ஸ்தாபனம் தொடர்பாக</u>

1. எமது ஸ்தாபனத்தின் கடந்த காலம்பற்றிய விமர்சனம்,
2. ஸ்தாபனத்தின் இன்றைய நிலைபற்றிய கணிப்பீடு,
3. ஸ்தாபனம் தொடர்பாக எதிர் காலத்தில் கடைபிடிக்கப்பட வேண்டிய பார்வைகள் வேலைமுறைகள் பற்றிய வழிகாட்டுதல்கள்
4. ஸ்தாபனத்தில் புதிய கட்டமைப்பு, அதன் சட்ட ஒழுங்கு வரையறைகள்.

<u>இ. வேலைத்திட்டம் தொடர்பாக</u>:

1. கடந்தகால வேலைத்திட்டங்கள் மீதான விமர்சனம்,
2. கடந்தகால வேலைத்திட்டங்களின் இன்றைய நிலைபற்றிய கணிப்பீடு,
3. எதிர்கால வேலைத்திட்டங்கள், வேலைமுறைகள் ஆகியவற்றில் கடைபிடிக்கப்பட வேண்டிய பார்வைகள், வேலைமுறைகள் தொடர்பான வழிகாட்டுதல்கள்,
4. எதிர்காலத்தில் மேற் கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள்:

அ. ஸ்தாபனத்தினை சீரமைத்தல், பலப்படுத்தல், விரிவு படுத்தல், இரண்டாவது காங்கிரஸை நோக்கி முன்னேறல்,

ஆ. மக்கள் ஸ்தாபனங்களில் தொழிற்சங்கங்களை கட்டியெழுப்பலும் வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுத்தலும்,

இ. நிதி, பொருளாதாரத்திற்கான திட்டங்கள்,

ஈ. பிரசாரத் திட்டங்கள்

உ. [illegible] திட்டம்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிதம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன; கிராமம் கிராமமாக ஆட்கடத்தல், மிரட்டல்கள் மூலம் மாதந்தம் பல கோடி ரூபாய்கள் திரட்டப்படுகின்றன. முன்னர் LTTE விமர்சித்தால் பச்சை மட்டையடி, எதிர்த்தால் சூடு, ஆனால் இப்போது விமர்சனம் செய்தாலே துப்பாக்கிச்சூடுதான் பதில். அரசாங்க நிர்வாகிகள் அலுவலர்கள், வேலையாட்கள் ஆசிரியர்கள், போன்றவர்கள் அனைவரும் LTTE யின் கண்முன்னால் அவர்களின் விரோதிகள். இதெல்லாம் மனித உரிமை பிரச்சினைகள் இல்லையா? இவையெல்லாம் தமிழ் மக்களிற்கான கொடுரங்களில்லையா? இதை அனுபவிப்பவர்கள் தமிழர்களில்லையா? மேலும்;

1) யார் யாரெல்லாம் இந்திய படையெடுப்பு நடாத்தப்படவேண்டுமென்று கூக்குரலிட்டார்களோ, மாநாடு நடாத்தினார்களோ, தீர்மானங்கள் நிறைவேற்றினார்களோ அவர்களேதான் இன்று இந்திய எதிர்ப்பு பிரச்சாரத்தை நடத்துகிறார்கள் என்பது கவனத்திற்குரியது. எமக்குள் ஐக்கியம் வேண்டும், நமது போராட்டத்தை நாமே நடத்தியாக வேண்டுமென்று நாங்கள் குரல் எழுப்பியபோது எங்களைப்பார்த்து இந்திய விரோதிகள் என முத்திரை குத்துவதற்காக, அத்தனையையும் செய்தவர்கள்தான் இன்று இந்தியாவிற்கு எதிரான பிரச்சாரத்தையும் செய்கிறார்கள். இந்தியா எமக்கு தம்பனே தவிர ஆபத்பாந்தவன்(கன்னபரமாத்மா) அல்ல என்று நாம் கூறியபோது, எமக்கும் இந்திய அரசிற்குமிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தி விடவேண்டுமென்ற அக்கறையுடன் இந்திய அரசாங்க அதிகாரிகளிற்கு இரகசிய அறிக்கைகளிற்கு மேல் அறிக்கைகள் அனுப்பியவர்கள்தான் இன்றைய தங்களை இந்திய எதிர்ப்பு பிரச்சாரத்திற்கு கைகோர்த்து வரும்படி மிரட்டல் செய்கிறார்கள்.

2) இந்தியாவானது, பணம், வசதிவாய்ப்புகள், சார்பான பிரச்சாரங்கள், பதவிகள், மற்றும் இத்தியாதிகளை LTTE க்குவாரி வழங்கியபோது, இந்தியாவிற்கு வாழ்த்துப்பாடியவர்கள், எமது குருசேஷத்திரத்தில் இந்தியாதான் கன்னபரமாத்மா என்று சொல்லிக்கொண்டு அங்கே LTTE க்காக தூது போனவர்கள் அப்போது இந்தியா LTTE யைத்தானே அங்கீகரித்திருக்கிறது என்று எம்மைப்பார்த்து ஏளனம் செய்தவர்கள், கேள்வி எழுப்பியவர்கள் இவர்களிற்கெல்லாம் அந்த நேரத்தில் இந்திய ஆதரவும் அதன் அங்கீகாரமும் சர்வதேச முற்போக்கு ஜனநாயக நடவடிக்கையாக இருந்தது. ஆனால் இந்தியப்படைகளிற்கும் LTTE க்குமிடையில் அவை இரண்டினாலும் தவிர்த்துவிட முடியாதபடி யுத்தம் ஆரம்பித்தவுடன் இந்தியாவானது தமிழ் மக்களின் விரோதி எனவும், அது இனப்படுகொலை செய்கிறது எனவும் ஓலமிடத்தொடங்கிவிட்டார்கள். அவர்களின் பார்வையால் LTTE மட்டுந்தான் தமிழ்மக்கள், LTTE க்கு ஆதரவளித்தால் முற்போக்கு, நண்பன், LTTE யை எதிர்த்தால் பிற்போக்கு, விரோதி; ஆக முற்போக்கும் பிற்போக்கும், நண்பன்-விரோதியும் LTTE யைச் சார்ந்து தான் இருக்கின்றன என்பது அவர்களின் கருத்தாகலாம். ஆனால் அது தமிழ்மக்களின் கருத்தாகவோ, இந்த உலகம் புரிந்துவைத்துள்ள உண்மையாகவோ இருக்க முடியாது.

தோழர்களே!

இதைவிட இன்னொரு பிரதானமான கேள்வி என்னவென்றால் LTTE யின் நிலைமையில் EPRLF இருந்து, EPRLF க்கும் இந்தியப் படைகளிற்குமிடையில் நியாயபூர்வமான காரணங்களிற்காக ஒரு யுத்தம் ஏற்பட்டிருக்குமாயின், இன்றைக்கு மனித உரிமைகள் பற்றியும், மக்களின் துன்பங்கள் பற்றியும் LTTE க்கும் இந்தியப்படைகளிற்கும் இடையில் யுத்த நிறுத்தம்

...4/-

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நிறுத்தம்- பேச்சுவார்த்தை பற்றியும் ஓலோலமிடுகின்ற இந்த வெளி-நாட்டு தமிழ்நாட்டு, உள்நாட்டு சக்திகள் என்ன செய்திருப்பார்கள் என்று சிந்தித்து பாருங்கள், கேள்வி எழுப்புங்கள்?

அவ்வாறான ஒரு சூழ்நிலையே ஏற்பட்டிருந்தால் இன்றைக்கு மனித உரிமைகள்பற்றி பேசியிருக்கவே மாட்டார்கள். மக்களின் துன்பங்களை கணக்கில் எடுத்திருக்க மாட்டார்கள். கம்யூனிஸ்டுகள் எப்போதும் இப்படித்தான் என்று எமக்கெதிராக போர்க்கோலம் [illegible] பூண்டிருப்பார்கள். எம்மை ஒடுக்குவோருக்கு எல்லா வகைப்பட்ட ஆதரவுகளையும், எந்தவித நிபந்தனையுமின்றி வழங்கியிருப்பார்கள்.

எனவே தோழர்களே!.

LTTE க்கும் மேற்குறிப்பிட்ட சக்திகளிற்கும் உள்ள உறவென்பது இன உறவல்ல. அதற்கு இன உணர்வு அடிப்படையும் இல்லை. மாறாக சர்வதேச உள்நாட்டு, சுரண்டிக்கொள்ளையடிக்கும் வர்க்க உறவுகளோடும், அதன் நலன்களோடும் சம்பந்தப்பட்ட விடயமாகும். இதை நாம் [illegible] தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்.

எமது மக்களின் உரிமைகள் தொடர்பாகவும், பாதுகாப்பு தொடர்பாகவும், எமது மக்களின் உயிர் உடமைகளிற்கு ஆபத்து நேரும் போது அவை தொடர்பாகவும் குரலெழுப்பவும் உரிமையும் கடமையும் எமக்குண்டு. ஆனால் புரட்சிகர சக்திகளாகிய நாம் நமது பலம், பலயீனங்கள், நம்மைச் சூழவரவுள்ள சக்திகளின் நிலமைகள் புரட்சிப்-பாதையின் நீண்ட கால நலன்கள் ஆகியவற்றை சரியாக கணிப்பிட்டு எச்சரிக்கையோடும் விழிப்போடும், சரியான அளவுகளோடும் செயல்-பட வேண்டியவர்களாவோம். உடனடி நிகழ்வுகளாலும், நிகழ்ச்சி-களாலும் பாதிக்கப்பட்டு புரட்சியின் நீண்டகால நலன்களிற்கு பாதிப்பு விளைவிக்கும் வகையில் நாம் நடந்துகொள்ளக்கூடாது. என்பதில் நாம் எந்தச்சந்தர்பத்திலும் கவனமாக இருக்கவேண்டும்.

நாம் எந்தவேளையிலும் 'ஈழம்' எனும் பெயர்ப்பலகைக்காக போராடியவர்கள் அல்ல. இலங்கையின் அரசியல் வரலாற்று ஓட்டத்தின் விளைவாக தவிர்க்க முடியாவகையில் எழுந்த ஈழப்போ-ராட்டத்தின் ஊடாக இலங்கைத்தீவின் ஒருபகுதியில் ஒரு சமூகப்புரட்சிக்கு வழி வகுக்கவே போராடினோம். ஒரு சமுதாய மாற்றத்திற்காகவே போராடினோம். பல்வேறு வகையிலும் ஒடுக்கப்பட்ட நிலையிலிருக்-கும் உழைக்கும் மக்களின் நிரந்தர விடிவுக்காகவே போராடினோம். சாதி பேதங்களற்ற, சுரண்டலற்ற பொருளாதார ஏற்றதாழ்வுகளற்ற பிரதேச பிளவுகளற்ற மதப்பகையற்ற, ஒரு நீதியான சமூகத்தை காண்பதற்காகவே போராடினோம். ஆனால் கடந்தகாலத்தில் ஈழப்போராட்டத்தின் போக்கானது, உட்கொலைகள் நிறைந்ததாக-வும் அராஜகக் கொடூரங்கள் அளவுக்கு மீறியதாகவும் ஆகி போராட்டமே முனை மழுங்கடிக்கப்பட்டது மட்டுமல்லாமல், பழைய ஆண்ட பிற்போக்கான சமூகப்புரம்புறையை மீண்டும் மிகவும் வலிமையுடன் ஆள நினைப்பதை நிலைநாட்டும் வகையானதாகவே அமைந்தது. அரசியல் நெறிமுறைகளற்ற போக்குகளின் ஆதிக்கமானது போராட்-

....5/-

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


டத்தின் மீது மக்களிற்கு வெறுப்பையும் விரக்தியையுமே ஊட்டியது. இயக்கங்கள் மீதான நம்பிக்கையீனமும், வெறுப்பும் கடைசியில் தம்மைப் பாதுகாக்க, அழிவில் இருந்து தம்மை மீட்க வெளியில் இருந்து ஆபத்பாந்தவர்கள் யாராவது வரமாட்டார்களா என மக்கள் ஏங்கும் நிலைக்கு போராட்டத்தின் போக்கு தள்ளாகியது. இதன் விளைவுதான் இந்தியாவின் உணவுப்பார்சல்களிற்கு எமது மக்கள் மாலையிட்டு பூரணகும்பங்களுடன் வரவேற்ற காட்சியாகும். போராட்டத்தை இந்தப்போக்கிற்கு உள்ளாக்கிய பெரும்பொறுப்பு LTTE யையும், அதனை ஆதரித்தவர்களையுமே சாரும்.

தோழர்களே!

LTTE யும் அதன் ஆதரவாளர்களும் இப்போதுள்ள தமது தேவைகளிற்காக எம்மைப்பார்த்து இந்திய ஆதரவாளர்கள் என முத்திரை குத்தி எம்மை தனிமைப்படுத்த முயற்சிக்கிறார்கள். இவ்விடயத்தில் நாம் புரிந்துகொள்ள வேண்டியது விரோத பிரச்சாரத்தில் ஈடுபட்ட போதிலும் அவ்வாறான பிரச்சாரங்களின் மூலம் இந்தியாவிற்கு நெருக்கடியை உருவாக்கி, எம்மைத்தனிமைப்படுத்தி இந்தியாவை LTTE க்கு மட்டும் ஆதரவளிக்கும் நிலமையை உருவாக்குவதையே உள்நோக்கமாக கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்தியப்படைகள் தவிர்க்கமுடியாத வகையில் LTTE யுடன் யுத்தம் ஒன்றில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற போதிலும், இந்தியாவின் நோக்கம் LTTE யை நிராகரிப்பது அல்ல. மாறாக அதனை தனது அரசியல்வழிக்குள் கொண்டுவருவதையே நோக்கமாக கொண்டிருக்கிறது என்பதையும் அதற்காக இந்தியா மீண்டும் LTTE க்கு விட்டுக்கொடுப்புகளை மேற்கொள்ளலாம் என்பதையும் அவ்வாறு ஏற்படுகின்றபோது இதே LTTE யும் அதன் ஆதரவாளர்களும் மீண்டும் உரத்த குரலில் இந்தியாவிற்கு வாழ்த்துப்பா பாடத் தொடங்கிவிடுவார்கள் என்பதையும் நாம் தெளிவாக புரிந்துகொண்டு செயல்பட வேண்டியது அவசியமாகும்.

எனவே இன்றைய அரசியல் சூழ்நிலையில் ஆங்காங்கே ஏற்பட்டிருக்கும் இந்திய எதிர்ப்பு பிரச்சார சலசலப்புகளிற்கு எம்மையும் நாம் உட்படுத்திக்கொள்வோமாயின் அது மிக விரைவில் எம்மை நாமே தனிமைப்படுத்தும் தற்கொலை முயற்சியாகிவிடும் என்பதில் விழிப்பாக இருக்க வேண்டும்.

இதேவேளை இந்தியப்படைகளிற்கும் LTTE க்கும் இடையில் நடந்த யுத்தத்தில் எமது மக்களின் உயிர்களிற்கும் உடமைகளிற்கும் பாதிப்புக்கள் ஏற்பட்டதன் விளைவாக பொதுமக்கள் மத்தியில் இந்தியப்படையினர் மீது ஒரு வகையான ஆத்திரம் ஏற்பட்டிருப்பதென்பது உண்மையேயாயினும் அதை வைத்துக்கொண்டு எமது மக்கள் இந்தியாவிற்கெதிரான விரோதமான உணர்வை கொண்டிருக்கிறார்கள் என நாம் முடிவுக்கு வருவோமாயின் அது தவறாகும். ஏனெனில் எந்தப்படையினர் LTTE க்கு எதிரான யுத்தத்தில் எமது மக்களும் பாதிக்கும் வகையில் நடந்துக் கொண்டார்களோ, அவர்களேதான் எமது மக்களிற்கு தேவையானவற்றில் நிர்வாகத்தை நிரமைக்க வேண்டியவர்களாகவும், பாதுகாக்க வேண்டியவர்களாகவும் உள்ளனர். மின்சாரத்தை, தொலைதொடர்புகளை, குடிநீர் வசதிகளை, போக்குவரத்துக்களை, ஒழுங்கமைக்க வேண்டியவர்களாக உள்ளார்கள். கல்வி அமைப்பு, வைத்திய சேவைகளை புனரமைக்கவும், வசதிகளை கட்டவும் வேண்டியவர்களாக

....6/-

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


உள்ளனர். ஸ்ரீலங்கா ராணுவத்திடமிருந்தும், சிங்கள ஊர்காவல் கடையினரிடம் இருந்தும் எமது மக்களிற்கு பாதுகாப்பு வழங்க வேண்டியவர்களாக உள்ளார்கள். கல்வி அமைப்புகள் மீண்டும் தடையற்று இயங்க வழிவகுக்க வேண்டியவர்களாக உள்ளார்கள். மற்றும் ஏற்பட்ட அழிவுகளை புனரமைக்க வேண்டியவர்களாக உள்ளார்கள்.

மேற்கண்ட புனரமைப்பு வேலைகளை இந்திய சமாதானப் படையினர் செய்கின்றார்கள் என்பதற்காக அவர்கள் செய்த அட்டூழியங்களை நாம் மறந்து விடவில்லை. ஆயிரக்கணக்கான மக்களின் இறப்பிற்கும், கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியை வாய்ந்த சொத்துக்கள் அழிந்ததற்கும், நாசமாக்கப்பட்டதற்கும், இந்திய சமாதானப் படையினரும் காரணமாவார்கள். இது மாத்திரமல்லாமல், பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் பல இவர்கள் பெண்களுடன் தகாத முறையில் நடந்தும் உள்ளனர். இக்கொலைகளை நிறுத்தவும், பெண்களுக்கேற்பட்ட துன்பங்களை நிறுத்தவும், இந்திய மத்திய அரசுக்கு எமது கண்டனங்களை தெரிவித்ததுடன், இவற்றை சீர்செய்ய எட்டு அம்சங்கள் கொண்ட எமது ஆலோசனைகளையும் இந்திய மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம். இது தொடர்பாக இந்திய அரசு சில ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்தது, என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். ஆனால் இவ்வளவு அழிவுகளையும், செய்த சமாதானப் படையினர்தான் மேற்கண்ட நிவாரண [illegible]களுக்குக் வேலைகளையும் செய்து வருகின்றார்கள். அதேசமயம் இவ்வளவு சம்பவங்களுக்கும் மூலகாரணமாயிருந்த விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் அழிவுவேலைகளையே செய்து வருகின்றார்கள். போக்குவரத்தை சீர்குலைத்தல், பாடசாலை ஆசிரியர்களை கடமைக்குச் செல்லாமல் தடுத்தல், தபால் ஊழியர்கள் கடமைக்கு போனார்கள் என்பதற்க்காகவே சுட்டுக்கொல்லப்படுதல் போன்ற நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளனர். ஈழத்தில் இடைக்கால நிர்வாகம் ஏற்படும் வரை இந்திய சமதானப்படையுடன் மிக அன்னியோன்யமாக இருந்த புலிகள் இடைக்கால நிர்வாகத்தில் மேலதிக ஆசனங்கள் வேண்டும் என்பதற்காக பல நாடகங்களை நடாத்தினர். அதில் உண்ணாவிரதங்கள், ஊர்வலங்கள், திலீபனின் சாகும்வரை உண்ணாவிரதம் என்பதன் இறுதிக்கட்டமாகத்தான், இந்தியப்படையுடன் போரில் இறங்கினர். நீண்டதூரப்பார்வையற்ற இவர்களின் வறட்டுத்தனமான கொள்கைகளும் நடவடிக்கைகளும், தொடர்ந்தும் எமது மக்களை கொலைக்களத்துக்கு அனுப்புவதாகவே உள்ளது. இந்தியப்படையினர் தமிழ்மக்களிற்கும் முஸ்லீம் மக்களிற்கும் இடையில் நல்லுறவுகளையும், பரஸ்பர நம்பிக்கைகளையும் உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவர யானை தமிழ்-முஸ்லீம் விரோதங்களும் பகைமைகளும் வளருவதற்கான நிலைமைகளையே தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது. இந்நிலைமையில் ஒப்பீட்டு ரீதியில் எமது மக்களின் நண்பர்கள் யார்? விரோதிகள் யார்? என தீர்மானிக்கவேண்டியவர்களாகவே நாம் உள்ளோம்.

எமது மக்கள்- இந்திய அரசு என தொடர்புபடுத்திப் பார்க்கையில் இலங்கையில் ஸ்ரீலங்கா அரசு என்ற ஒரு சக்தியும் இருப்பதை

....7/-

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாம் மறந்துவிட முடியாது. இலங்கையில் இந்தியப்படைகள் இருந்தாலும் எமது மக்கள்மீது ஆதிக்கம் செலுத்தும் அரசு இந்தியா அல்ல. அது ஸ்ரீலங்கா அரசேயாகும். அதன் தொடர்பாகத்தான் தமிழ்மக்கள் மத்தியில் உள்ள சக்திகளிற்கும், இந்திய அரசுக்கும் இடையில் உறவுகள் ஏற்பட்டன. பல நிகழ்வுகள் இடம்பெற்றன. அதன் தொடர்ச்சியாகத்தான் இந்தியப்படைகள் எமது நாட்டுக்குள் அமைதிகாக்கும் படைகளாக வரவேண்டிய நிலைமைகள் உருவானது. அமைதிப்படை என்பதன் அர்த்தம் யாரும் எதையும் செய்ய அதைப்பார்த்துக்கொண்டு அமைதியாக இருக்கும் படையல்ல. அவ்வாறான ஒரு பிரச்சாரத்தை மேற்கொள்வது ஒன்றில் முதர்க்கத்தனமானது அல்லது அறியாமையாகும். எனினும் இந்தியப்படைகளிற்கும், LTTE க்கும் இடையிலான யுத்தத்தில் மக்களிற்கு ஏற்பட்ட பாதிப்புகளை இந்தியா தவிர்த்திருக்க முடியாதா? எனக் கேள்வி எழுப்புவோமாகில், நிச்சயமாக, மக்களிற்கு ஏற்பட்ட பாதிப்பில் பெருமளவு விகிதாசாரத்தை தவிர்த்திருக்கலாம். அதற்கு இந்தியாவானது முன்கூட்டியே LTTE யை புரிந்து வைத்திருக்க வேண்டும். இந்திய தீர்க்கதரிசனத்துடன் நடந்திருக்குமாக இருந்தால், மற்றைய நட்பு சக்திகளின் உதவிகளையும் நாடி இருந்தால் இந்தியப்படைகளினுள்ள சில தனிநபர்கள் ஆங்காங்கே விடக்கூடிய சில தனிப்பட்ட குற்ற விவகாரங்களை தவிர பெருமளவு பாதிப்புகளை தவிர்த்திருந்திருக்கலாம். அக்டோபர் 10-ம் திகதிக்கு முன்னர் இந்தியா கண்மூடித்தனமாக எல்லாவற்றிற்கும் LTTE க்கு பின்னால் போனது. அதன் விளைவு LTTE யினால் இந்தியப்படைகள் தாக்கப்பட்டபொழுது இந்தியப்படையினர் கண்மூடித்தனமாக நடந்துகொண்டனர். மக்களிற்கு ஏற்பட்ட பாதிப்புகளிற்கு அடிப்படை பொறுப்பு LTTE யையே சாருமாயினும், இவ்விடயத்தில் இந்தியாவின் பொறுப்பும் நிராகரிக்கப்பட முடியாது என்ற வகையிலேயே மக்களிற்கு ஏற்பட்ட பாதிப்புகளிற்கு நாம் இந்திய அரசிடம் நிவாரணம் கோரியுள்ளோம். வெளிப்படையாக நாம், இந்தியப்படைகளிற்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபடாத போதிலும் இந்திய அரசு அதிகாரிகளிடம் இந்தியாவின் தவறுகளையும், பொறுப்புகளையும் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்களையும் நிவாரணங்களையும் திட்டவட்டமாகக் கூறிவந்துள்ளோம். இந்தியப்படையினர் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்களவு திருத்தங்களும், துரிதமான நிவாரண வேலைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதே வேளை தனது இராணுவ பலத்தை இழந்துகொண்டிருக்கும் LTTE ஆனது மக்கள் விரோதச் செயல்களை மிக அதிகளவில் துரிதமாக்கி இருக்கின்றது.

LTTE இந்தியாவுடனான நட்பு வடயத்தைப்பற்றிய நமது அணுகுமுறையில் நாம் கவனிக்க வேண்டிய மற்றொரு அம்சம் "சர்வதேச அரசியலில் இந்தியா" என்பதாகும். இன்றைய உலகத்தில் சர்வதேச ரீதியாக நடைபெறும் ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டங்கள், தேசிய விடுதலை இயக்கங்கள், வர்க்கப்போராட்டங்கள், நாடுகளிற்கிடையிலான சமாதானத்துக்கான இயக்கங்கள் தொடர்பாகவும், சோசலிச நாடுகளுடனான உறவுகள் தொடர்பாகவும் இந்தியா சர்வதேச அரசியலில் வகிக்கும் பாத்திரத்தை நாம் சரியாக கணிப்பிட்டுக்கொள்ள வேண்டும். நமது புரட்சிக்கும், சர்வதேச ரீதியாக நடைபெறும் புரட்சி நடவடிக்கைகளிற்கும் பிரிக்கமுடியாத உறவுகள் உள்ளன. நமது புரட்சியை நாமே நடத்த வேண்டுமெனினும், அது சர்வதேச அரசியல் விவகாரங்களிலிருந்து தனிமைப்பட்டு நிற்கும் ஒரு செயல்பாடாக அமைய முடியாது. இந்தியாவிற்கும் எமக்கும் இடையே நமக்குள்ள

...8/-

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள்ள உறவென்பது எவ்வாறாயினும் அது வெளிநாட்டு உறவேயாகும். இந்தியாவோடு நமக்குள்ள உறவை தீர்மானிப்பது என்பது எமக்கும் இந்தியாவிற்கும் இடையேயான சர்வதேச உறவைத் தீர்மானிக்கின்ற விடயமே தவிர உள்நாட்டு உறவுத்தன்மையை அடிப்படையாகக்கொள்ளாது.

இந்திய அரசு ஒரு முதலாளித்துவ அரசு. ஆனால் நாமோ முதலாளித்துவத்திற்கெதிரானவர்கள் என்பதில் இருந்து நாம் இந்திய அரசுக்கு எதிரானவர்கள் என்ற முடிவிற்கு வரஇயலாது. இந்திய முதலாளித்துவ அமைப்போடும், அதன் அரசோடும் கணக்குத் தீர்த்துக்-கொள்ள வேண்டியவர்கள் இந்திய மக்களும் இந்தியபுரட்சியாளர்களுமே தவிர நாமோ எமது மக்களோ அல்ல. இதேவேளை இந்தியாவிலுள்ள உழைக்கும் மக்களிற்கும், எமது தேசத்தில் உள்ள உழைக்கும் மக்களிற்-கும் உள்ள உறவு என்பது சர்வதேச உழைக்கும் மக்களிற்கிடையே-யான வர்க்க உறவேயாகும். இந்திய முதலாளித்துவ அமைப்போடும், அதன் அரசோடும், கணக்குத் தீர்த்துக்கொள்ளும் உரிமையும் கடமையும் எமக்கு எப்படி இல்லையோ அதைப்போலவே அதற்கு முட்டுக்கொடுக்கும் கடமையும் பொறுப்பும் எமக்கில்லை. அதைநாம் செய்யப்போவ-துமில்லை. இந்தியா சர்வதேசிய அரசியல் விவகாரத்தில் ஏகாதி-பத்தியத்தின் நண்பனாக இல்லாத வரையில்தான் எமக்கும் இந்திய அரசுக்கும் நட்புறவு இருக்கும் என்பதை இந்திய அரசு அதிகாரிகளிடம் நேரடியாகவும், வெளிப்படையாகவும், உறுதியாகவும் பல தடவைகள் கூறியிருக்கின்றோம். இந்த அடிப்படையில் நாம் இந்தியாவோடு கொள்கை ரீதியாக வரையறுக்கப்பட்ட உறவைக்கொண்டிருக்கிறோமே தவிர கள்ளத்தனமான உறவை கொண்டிருப்பவர்கள் அல்ல. இந்தியாவை எதிர்பதுமட்டும் புரட்சிகர நடவடிக்கை ஆகிவிடமுடியாது. இந்தியாவை எதிர்ப்பவர்கள் அனைவரையும் நாம் மதிப்பீடு செய்வோமாயின் இவ்-விடயத்தை நாம் புரிந்தவர்களாவோம். பணத்திற்காக, ஆயுதங்-களிற்காக பதவி அதிகார பகிர்வுகளிற்காக நாம் இந்தியாவோடு உறவுகொண்டு இருக்கவுமில்லை. அவற்றிற்காக இந்திய எதிர்ப்பு கொள்கையை கடைபிடிக்கும் கொள்கையற்றவர்களுமல்ல. இதேவேலை எமது புரட்சிப்பாதையில் இந்தியாவானது ஸ்ரீலங்கா முதலாளித்துவ அரசின் பாதுகாவலனாக நின்று எமது மக்களின் புரட்சிக்கெதிராக இந்தியா படைநடத்துகின்ற நிலையொன்று ஏற்படுமாயின் அப்போது நாம் இந்திய படைகளுக்கு எதிராக போராடவேண்டி ஏற்படும். அதல்லாது காலம்வரை இந்திய அரசுக் எதிராகப் போராட வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. இதில் நாம் ஊசலாட்டம் இன்றி, தெளிவாக நின்று செயல்படுதல் வேண்டும். மேலும் ◦.

தோழர்களே!

மக்கள் மத்தியில் LTTE க்கு அதன் தீவிர ஆதரவாளர்களைத்தவிர எந்தவித செல்வாக்கும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்-புகின்றோம். LTTE க்கும் தமிழ்நாட்டிலும் ஆதரவில்லை. இதனை இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு முன்னரும் பின்னரும் நாம் நேரடியாக பரிசோதித்து பார்க்கும் பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. LTTE யானது எமது மக்கள் மத்தியில் ஒரு தேர்தலை சந்திக்கும் திராணியற்று அது தனது ராணுவ பாசிச நடவடிக்கைகள் மூலம் மக்களை அடக்கி-யாளலாம், தனது நலன்களை தொடர்ந்து பாதுகாத்துக்கொள்ளலாம், தனது ஆயுதபலத்தையும், பணபலத்தையும் மக்கள்செல்வாக்கு எனகாட்-டிக்கொண்டிருக்கலாம், என்று மிகக்கடுமையாக முயற்சிக்கின்றது.

...9/-

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அது நீண்டகாலத்தில் சாத்தியமாகாது, என்பது மட்டுமல்ல, அது தானே தன் குழுச்சக்தி மூலம் தனது இருப்பிற்கான கால அளவையும் குறுக்கிக்கொண்டது. LTTE க்கும் இந்தியப்படைக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தத்தில் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டதனால் இந்தியப்படையினர் மீது மக்களிற்கு வேதனையும் ஆத்திரமும் ஏற்பட்டதெனினும் அழிவு தொடர்பாக மக்களிற்கு எந்தவித கவலையுமில்லை. நம்மை பிடித்த சனியன் தொலைந்தால் போதும் என்பதே மக்களின் மனோநிலை. மக்கள் தமது விருப்பத்தை வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் அவர்களிற்கு வழங்கப்படுகையில் அதனை உறுதியாகவே தெரிவிப்பார்கள் என்பதை நாம் உறுதியாகவே நம்புகிறோம். LTTE க்கும் இது நன்கு தெரியும். அதனாலேயே LTTE ஒரு தேர்தல் வந்துவிடாமல் இருப்பதையே குறியாகக் கொண்டுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் எமது பிரதானமான உடனடி கடமை என்னவெனில் மக்களின் தீர்ப்பு வெளிப்படுத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கு நாம் போராடுவதேயாகும். இதனை நாம் தேர்தல்வாதிகளாக மாறிவிட்டோமென கொச்சைப்படுத்திக்கொள்ள வேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறோம். முதலாளித்துவ ஜனநாயகமானது ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களிற்கு விடிவைத்தரும் ஒன்றல்ல என்பதில் நாம் உறுதியாகவே உள்ளோம் எனினும் இன்று எமது மக்களின் அதுகூட இல்லாமல் இருக்கின்றார்கள். எமது மக்களின் ஜனநாயக குரல்வளைகளை நசுக்கப்பட்டிருக்கின்றன. சிறிலங்கா அரசாங்கம் வழங்கத்தயாராயிருக்கும் குறைந்தபட்ச ஜனநாயக உரிமைகளைக்கூட LTTE எமது மக்களிற்கு வழங்கத் தயாராயில்லை. அதே வேளை LTTE என்பது ஒரு அரசுமல்ல. ஒரு சர்வாதிகார அரசு கூட சில வரையறைகளுக்குட்பட்டிருக்கும். எமது மக்கள் பயந்து நடுங்கி ஒடுங்கி போயிருக்கும் வகையில் LTTE யின் ஆயுத கொடூரம் வரைமுறையற்ற ரீதியில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இதற்கொரு முற்றுப்புள்ளி வைக்காதவரை எமது எதிர்கால புரட்சிப்பாதையின் புதியகாலகட்டத்தில் ஒரு அடியைக்கூட எடுத்துவைக்க முடியாது. மக்களில்லாமல் புரட்சியை கற்பனையில் நகர்த்த முடியாது. சமுதாய மாற்றமானது பாய்ந்து செல்ல மாட்டாது என்ற விஞ்ஞான பூர்வமான சமுதாய சித்தாந்தத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் நாங்கள். எனவே எம்முன்னால் உள்ள இப்போதைய நம் கடமை எமது மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளிற்காக போராடுவதே உடனடியானதாகும். அதில்லாமல் புரட்சிகர ஜனநாயகத்திற்கான போராட்டம் ஆரம்பமாகவே மாட்டாது. அந்த அடிப்படையிலேயே, எமது உடனடி போராட்டக் கடமைகளை பின்வருமாறு வகுக்கின்றோம் :-

1) இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் படியான மாகாணசபை அமைப்பில் உயர்ந்தபட்ச அதிகாரங்களிற்காகவும், அதன் நிரந்தர உத்தரவாதத்திற்காகவும் போராடுதல்.

2) மலையகமக்களை நாடுகடத்துவதற்கெதிராகவும், அவர்களின் பூரண குடியுரிமைகளிற்க்காகவும் போராடுதல்.

3) சிறையில் உள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி போராடுதல்.

4) நியாயமான முறையில் தேர்தல்களை நடாத்த கோரி போராடுதல்.

5) எமது மக்களின் உயிர் உடமைகளை பாதுகாப்பதற்காக குரல் கொடுத்தல், போராடுதல்.

6) வாழ்விழந்து போயிருக்கும் இலட்சக்கணக்கான எமது மக்களின் புனர்வாழ்விற்க்காகவும் சீரழிக்கப்பட்டு போயிருக்கும் எமது தேசத்தின் உடமைகளினதும், பொருளாதாரத்தினதும் புனரமைப்பதற்க்காகவும் போராடுதல்.

...10/-

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கையிலுள்ள தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை, தேசிய சிறுபான்மை இனத்தவரின் வாழ்வும், தனித்துவமும் பாதுகாப்பும் உத்தரவாதப்படுத்தப்படும் உரிமைகள் உட்பட முழு இலங்கையிலும் வாழுகின்ற அனைத்து மக்களிற்குமான சமுதாயப்புரட்சிக்குரிய எதிர்கால நடவடிக்கைகளை நாம் தொடர்ந்து மேற்கொள்வதற்கும், புரட்சியைக்குறித்து அவைத்து உழைக்கும் மக்களையும் அணிதிரட்டுவதற்கும் மேற்குறிப்பிட்ட உடனடிக்கோரிக்கைகளை முன்வைத்துப்போராடுவது அவசியமாகவுள்ளது.

தென்னிலங்கையிலுள்ள புரட்சிகர சக்திகள், இடதுசாரி சக்திகள், உண்மையான ஜனநாயக சக்திகள் மற்றும் முற்போக்குசக்திகள் ஸ்ரீலங்கா முதலாளித்துவ அரசின் ஒடுக்கு முறைக்கெதிராக முகங்கொடுக்க வேண்டுமிருக்கின்ற அதேவேளை, சிங்கள பௌத்த பேரினவாத வெறியையும் அதில் இருந்து தோற்றம் பெற்ற ஜனதா விமுக்தி பெரமுனா(JVP) எனும் பெயரில் இயங்கும் சிங்கள பௌத்த பேரினவாத பாசிச பயங்கரவாதத்தின் கொலைகாரத்தனங்களையும் முகங்கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். தென்னிலங்கையிலுள்ள புரட்சிகர, இடதுசாரி ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகள் மத்தியில் இலங்கையிலுள்ள தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை திட்டவட்டமாக அங்கீகரித்த திட்டத்தின் அடிப்படையிலேயே இலங்கையில் ஒரு சமுதாய புரட்சி முன்னெடுக்கப்படுவது சாத்தியமானது என்பது உறுதியாக உயரப்படுகின்றது. அந்த அடிப்படையிலேயே நாம் தெற்கிலுள்ள சக்திகளுடன் எமது ஸ்தாபன பூர்வமான உறவுகளை நன்கு நெருக்கமாக கட்டி எழுப்பி வருகின்றோம். உடனடிக்கோரிக்கைகடள தொடர்பாகவும் பல்வேறுபட்ட மட்டத்தில் ஐக்கிய முன்னணிகளிற்கான பேச்சுவார்த்தையை நடாத்திவருகின்றோம். அவை மிக விரைவில் உறுதியான செயல்பாட்டு வடிவத்தை பெறும் என்ற நம்பிக்கையோடு செயல்பட்டு வருகின்றோம்.

புலிகளின் கொலைகாரத்தனங்களின் மத்தியிலும் எமது தோழர்கள் உயிர் ஆபத்துகளையும் எதிர் நோக்கிக்கொண்டு, உணவு, உடை, போக்குவரத்து வசதி நெருக்கடிகளையும் எதிர்நோக்கிக்கொண்டு ஸ்தாபனத்தை மீண்டும் ஒருங்கிணைப்பதிலும், சீரமைப்பதிலும், பலப்படுத்துவதிலும் உறுதியாக நின்று செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். புதிய யதார்த்தங்கள் புதிய தேவைகளின் அடிப்படையிலான புரட்சிகர ஸ்தாபனத்தினை பரந்துபட்ட மக்கள் மத்தியில் கட்டி எழுப்புதல் எனும் முடிவுக்கமைய தோழர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எமது தோழர்கள் உணவு, உடை போக்குவரத்து தேவைகளிற்கான நிதிப்பற்றாக்குறையை மிகவும் கடுமையாக எதிர்நோக்கி வருகின்றனர் எனினும் உறுதிகுலையாது நின்று செயல்பட்டு வருகின்றனர். கடந்த காலத்தவறுகள் மீண்டும் தலைதூக்கவிடக்கூடாது என்பதில் தோழர்கள் உறுதியாக உள்ளனர். இதே வேளை கடந்தகாலத்தில் ஸ்ரீலங்கா அரசாங்கமும், பின்னர் LTTE யும் அதன் ஆதரவாளர்களும் 3 star க்கும் எமக்கும் இடையில் முடிச்சுப்போட்டு பிரச்சாரம் செய்து வருகின்றனர். 3 star என்பது வதந்திகளில் இருந்து எழுந்த ஒரு பதம். பின்னர் ஸ்ரீலங்கா அரசாங்கமும் சில பத்திரிகைகளும் EPRLF, TELO, PLOT ஆகிய மூன்றையும் ஒட்டுமொத்தமாக குறிப்பதற்க்காக அப்பதத்தை பயன்படுத்தி வந்தன.

.....11/-

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பின்னர் LTTEயானது இம்மூன்று இயக்கங்கள் மீதும் ஒட்டுமொத்தமாக களங்கம் கற்பிக்கும் தனது பிரச்சார நோக்கங்களிற்காக பாவித்து வந்துள்ளது. அது இன்றும் தொடர்கிறது. ஆனால் உண்மையில் 3 Star என ஒரு இயக்கமோ அல்லது ஒரு ஐக்கிய முன்னணியோ கிடையாது. என்பதுமட்டுமல்ல, எமக்கும் PLOT TELO ஆகியவற்றுக்கும் இடையில் எந்தவித ஐக்கிய முன்னணி உடன்பாடு இல்லை.

எமது ஸ்தாபனமானது சட்டபூர்வமாக கட்சியாக தொழிற்படவுள்ளது. ஆனால் அது தமிழர் விடுதலைக் கூட்டணியைப்போல அல்லது மற்றைய பாராளுமன்றக் கட்சியைப்போல பிரமுகர் குழுக் கட்சியாக இருக்கமாட்டாது. பரந்துபட்ட மக்கள் மத்தியில், நகரங்கள், கிராமங்கள்தோறும், உழைக்கும் மக்கள் பிரிவினரையும் முற்போக்கு புத்திஜீவிகளையும், ஸ்தாபனரீதியாக திரட்டி ஒழுங்கமைந்த கட்சியைப்போல் செயல்படும். மிகவிரைவில் ஸ்தாபனத்தின் தேசிய மாநாடு நடத்தப்பட உள்ளது. இம்மகாநாடே புதிய கால கட்டத்தையும் தேவைகளையும், முன்னெடுப்புகளையும் தீர்மானிக்கும்.

ஸ்தாபனம் உங்களிடம் இருந்து உடனடியாக எதிர்பார்ப்பது....

1) வெளிநாடுகளில் இருக்கும் ஈழத்துமக்கள் மத்தியில் LTTE ஆதரவாளர்கள், LTTE எதிர்ப்பாளர்கள் என இருவகைப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். LTTE எதிர்ப்பாளர்களை சரியாக வகைப்படுத்தி அடையாளங்கண்டு அவர்களை எமது ஆதரவாளர்கள் ஆக்கும் பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். சமுதாய மாற்ற புரட்சிக்கண்ணோட்டம் உடையவர்களோடு உரையாடல்கள், கருத்துப் பகிர்வுகள் நடாத்தி உறுப்பினர்களை திரட்டும் வேலையில் ஈடுபடவேண்டும். LTTE ஆதரவாளர்களின் பிரச்சாரங்களிற்கு எதிராக பிரச்சாரம் செய்வதில் துவண்டு போய்விடக்கூடாது நம்பிக்கையோடு செயல்படவேண்டும். LTTE ஆதரவாளர்கள் மத்தியில் இருக்கும் வெவ்வேறு வகையினரை வகைப்படுத்தி அடையாளம் கண்டு வெவ்வேறுபட்ட அணுகுமுறை தந்திரோபாயங்களை வகுத்தி LTTEயின் அதிதீவிர ஆதரவாளர்களை தனிமைப்படுத்த வேண்டும்.

2) வெளிநாடுகளில் இருக்கும் எமது மக்கள் மத்தியில் ஓர் அரசியல் தொய்வு நிலை இருப்பது இயல்பானதே. ஆயுதந் தாங்கிய போராட்டம் நடைபெற்ற காலத்தில் இருந்தது போல இப்போது நிலைமைகள் இருக்கமாட்டாது என்பதை புரிந்துகொண்டு செயல்படவேண்டும். இப்போது வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் மத்தியில் இருக்கக்கூடிய சுலபமான அரசியலாக இந்திய விரோதக் கோசங்கள் செயல்படும்: இந்நிலையில் எமது தோழர்கள் பல கேள்விகளையும் நெருக்கடிகளையும் சந்திப்பார்கள்: சந்திக்க தயாராக இல்லாதவர்கள் ஏதாவது ஒரு காரணத்தைக் கூறிக்கொண்டு ஒதுங்கிக் கொள்வார்கள்: சிலர் தமக்குள்ளேயே முரண்பட்டுக்கொள்வார்கள்: சிலர் தமக்குள்ளேயே முரண்பாடுகளை தாமே தெளிவு படுத்திக்கொள்ளாமல் மற்றவர்களைக் குழப்பிக்கொண்டிருப்பார்கள்: சிலர் இனியென்ன எல்லாம் முடிந்துவிட்டது என தமக்குத்தாமே முடிவெடுத்துக்கொண்டு ஒதுங்கிக்கொண்டு இருப்பார்கள். ஒரு சமுதாய புரட்சி பற்றிய அரசியல் சித்தாந்த தெளிவற்ற நிலையில் தோழர்கள் மத்தியில் மேற்கண்டவாறான இயல்புகள் ஏற்படுவது இயல்பானதேயாகும். இனஞ்சார்ந்த தேசிய உணர்வு மேலோங்கியிருந்த ஒரு போராட்ட காலகட்டத்தில் இருந்து பாட்டாளிவர்க்கம் சார்ந்த ஒரு சமுதாயப் புரட்சிக்குரிய காலகட்டத்திற்கு மாறுகையில் இவ்வாறான தொய்வும், தேக்கமும், வெளியோட்டமும், ஒதுங்குதலும் இயல்பான விடயங்களாகும். இதைக்கண்டு நாம் சோர்வோ கலக்கமோ கொள்ள வேண்டியதில்லை. இந்நிலைமை வெளிநாடுகளில் உள்ளவர்கள் மத்தியில் மட்டுமல்ல எல்லா இடங்களிற்கும் பொதுவானதாகும். இதுவேளை அரசியல் சித்தாந்த தெளிவுள்ள தோழர்கள் இந்த மாறும் காலகட்டத்தை புரிந்துகொண்டு புதிய காலகட்டத்திற்கு தேவையான வேலைத்திட்டத்தை முன்னெடுத்தல் வேண்டும். அரசியல் சித்தாந்த புரிதல் உடையவர்கள் மேலும் அந்தஸ்தாபன அளவை விரிவுபடுத்துவதற்கான வேலைத்திட்டத்தை உறுதியோடு முன்னெடுப்பதுவும் அவசியமாகும்.

3) கடந்தகாலத்தில் எமது வெளிநாட்டு வேலைத்திட்டங்கள் மிகப்பெரும்பாலும் எமது தேசத்தின் பிரஜைகள் மத்தியிலேயே சுற்றி சுழன்று வந்திருக்கிறது. அதை அப்படியே தொடராமல் அந்தந்த நாடுகளில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் இயக்கங்கள் கம்யூனிஸ்ட் கட்சி, சமூக ஜனநாயகக்கட்சிகள், குழுக்கள், ஜனநாயக குழுக்கள் நிறுவனங்கள் , அந்நாடுகளில் அமைந்திருக்கும் ஏனைய நாடுகளின்

....12/-

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டங்கள் தொடர்பாக Solidarity குழுக்கள், அந்நாடுகளில் கிளைகொண்டிருக்கும் சர்வதேசிய தேசிய விடுதலை இயக்கங்கள், மற்றும் முற்போக்கு சக்திகள் ஆகியவற்றுடன் உறவுகளை வளர்த்துக்கொள்வதிலும் அவற்றுடன் பொது நிகழ்ச்சிகளை, கருத்தரங்குகளை மாநாடுகளை நடத்துவதிலும் அவற்றுடன் எமது பிரச்சாரங்களை பரஸ்பரம் பகிர்ந்துக் கொள்வதிலும் நாம் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டும்.

4) உங்களால் முடிந்த அளவு பொருளுதவியை தனியாகவோ கூட்டாகவோ ஸ்தாபனத்தின் தலைமைப்பீடத்திற்கு நேரடியாகவோ, நீங்கள் இருக்கும் நாட்டில் உள்ள கிளையூடாகவோ தொடர்ந்து மேற்கொள்ளவும் ஸ்தாபனத்தின் ஒரு உறுப்பினர் தனது வருமானத்தில் குறைந்தபட்சம் 1% தினை ஸ்தாபனத்திற்கு வழங்குதல் வேண்டும். அதைவிட ஆதரவாளர்கள் நண்பர்கள் வட்டத்தில் மந்தளவிற்கு நிதிதிரட்டி அனுப்பவும். நீங்கள் இருக்கும் நாட்டிலுள்ள நிதியுதவி நிறுவனங்களை மற்றும் நட்பு சக்திகளிடம் தொடர்புகளை வலப்படுத்தி நிலைமைகளையும் விடயங்களையும் தெளிவுபடுத்தி நிதி, பொருளுதவி பெறுவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவும்.

தோழர்களே!

நீங்கள் இருக்கும் நாட்டிலுள்ள நிலமைகளை விளக்கியும், நீங்கள் முன்னெடுத்திருக்கும் வேலைத்திட்டங்களின் நிலையை விளக்கியும் மற்றும் உங்கள் கருத்துகள், ஆலோசனைகளை உள்ளடக்கியும் அறிக்கைகளை தவறாது அடிக்கடி அனுப்பி வைக்கவும்.

ஓங்குக புரட்சி!
எமது உழைப்பு அனைத்தும் உழைக்கும் மக்களின் விடிவுக்காகவே!
இறுதி வெற்றி உழைக்கும் மக்களுக்கே!

தோழமையுள்ள,

(க.பத்மநாபா).
செயலதிபர்.
ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்